Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-70 கார்த்திகை, 2023 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00

## இளம்தொழில் முனைவோருக்கான காணிகளை அபகரித்த அரச உத்தியோகத்தர்கள்



- அரச பல்கலைக்கழகங்களில் பேச்சுரிமை
- இலங்கைத் தமிழர் அரசியல் வரலாறு (பாகம் –01)
- அதிகரித்த புலப்பெயர்வால் துருவப்படுத்தப்படும் ஈழத்தமிழ் சமூகம்

ஆய்வு – அறிவு – நிமிர்வு


அரசியல் ஆய்வாளர் சி.அ யோதிலிங்கத்தின் பார்வையில்

# இலங்கைத் தமிழர் அரசியல் வரலாறு

## (பாகம் –01)



சி.அ யோதிலிங்கம்



தமிழ் மக்களினுடைய அரசியலை நாங்கள் முழுமையாக விளங்கி கொள்ள வேண்டுமென்றால் தமிழ் மக்களினுடைய அரசியல் வளர்ச்சியை நாங்கள் ஒரு விஞ்ஞான பூர்வமான வரலாற்று ரீதியாக விளங்கி கொள்ள வேண்டியது அவசியமானது என்று நான் நினைக்கின்றேன். ஏனென்றால் வரலாறு என்பது ஒரு நூலகம். பரிசோதனை கூடம். ஆகவே வரலாறு தருகின்ற அனுபவங்கள் தகவலுக்கு ஊடாக தான் புதிய செல்வழி எல்லாவற்றையும் எங்களால் தீர்மானிக்க கூடியதாக இருக்கும். ஆகவே வரலாற்றை முழுமையாக புரிந்து கொள்வது அவசியமானது. தமிழ் மக்களினுடைய அரசியல் வரலாற்றை தெளிவாக விளங்கி கொள்வதற்காக அதனை சில காலகட்டங்களாக நான் பிரித்து நோக்குவது வழக்கம்.

இலங்கையில் தமிழ் மக்களினுடைய நவீன அரசியல் வரலாறு என்பது 1833 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறுக் அரசியல் சீர்திருத்தத்துடன் தொடங்குகிறது என்று நாங்கள் சொல்லலாம். வரலாற்றை கட்டம் கட்டமாக பாகுபடுத்துகின்ற போது முதலாவது காலகட்டமாக 1833 தொடக்கம் 1921 வரையான காலப்பகுதியை நாங்கள் பிரிக்கலாம். இரண்டாவது காலகட்டமாக 1921 இலிருந்து 1949 வரையான காலப்பகுதி. மூன்றாவது காலகட்டம் 1949 இலிருந்து 1968 வரையான காலப்பகுதி. நான்காவது காலகட்டம் 1968 இலிருந்து 2009 வரையான காலப்பகுதி. ஐந்தாவது காலகட்டம் 2009 இற்கு பின்னரான காலப்பகுதி. ஒவ்வொரு காலகட்டத்தையும் மிகவும் தெளிவாக விளங்கி கொள்வது அவசியமானது என்று நான் நினைக்கிறேன்.

முதலாவது காலகட்டத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கென்று ஒரு இன அரசியலை நகர்த்தி இருக்கவில்லை. அவர்கள் அரசியல் தளத்தில் தங்களை இலங்கையர் என்று தான் அடையாளப்படுத்தினார்கள். பண்பாட்டு தளத்தில் தான் தமிழர்கள் என்று அடையாளப் படுத்தினார்கள். அதனால் அன்றைக்கு தமிழர்களின் தலைவர்களாக இருந்தவர்கள் தமிழ் மக்களுக்கு மட்டும் தலைமை தாங்கவில்லை முழு இலங்கைக்குமே தலைமை தாங்கினார்கள். அன்று சிங்கள மக்கள் மத்தியில் இருந்து வலுவான தலைவர்கள் வரவில்லை. இலங்கைக்கென தலைவர்கள் வந்ததே தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தான். அதிலே மூன்று தலைவர்கள் மிக முக்கியமானவர்களாக இருந்தார்கள். ஒன்று சேர். முத்துக்குமாராசுவாமி, (சேர் பொன் இராமநாதனினுடைய தாய்மாமன்), இரண்டாவது சேர். பொன் இராமநாதன், மூன்றாவது சேர். பொன் அருணாச்சலம் இந்த மூன்று பேருமே ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் தான் என்று நாங்கள் சொல்லிக் கொள்ளலாம்.

சேர். முத்துக்குமாரசுவாமி தான் முதன் முதலாக "சேர்" பட்டம் பெற்ற இலங்கையர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தான் முதன்முதலில் ஐரோப்பிய சிந்தனை, ஐரோப்பிய அறிவு என்பதற்கு பதிலாக ஆசிய சிந்தனை, ஆசிய அறிவு இருக்கிறது என்பதனை வெளிக்காட்டியவர். அதாவது அறிவுக் கருவூலங்கள் இங்கேயும் இருக்கின்றன, நாங்கள் வெறுமனே ஐரோப்பிய கருவூலங்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதனை வலுவாக முன்வைத்தவர் சேர். முத்துக்குமாரசுவாமி தான். அவருடைய மைந்தன் தான் கலாஜோதி ஆனந்தகுமாரசுவாமி. அவர் கலாசார துறையிலும், பண்பாட்டு துறையிலும் ஏற்படுத்திய மாற்றங்கள் மிகவும் உயர்வானவை.

இரண்டாவது சேர். பொன் இராமநாதன். மக்கலம் அரசியல் சீர்திருத்தத்தின் (McCallum reforms) மூலம் 1911 ஆம் ஆண்டு முதன்முதலாக படித்த இலங்கையரை தெரிவு செய்கின்ற ஒரு தேர்தல் வருகிறது. அந்த தேர்தலில் சிங்கள தரப்போடு போட்டியிட்டு முழு இலங்கையிலும் வெற்றி பெற்றவர் சேர். பொன் இராமநாதன். மார்க்கஸ் பெர்னாண்டோ என்பவருடனான போட்டியில் முழு இலங்கையிலும் இருந்த மக்கள் இராமநாதனை தெரிவு செய்தார்கள். அன்றைக்கு வாக்களிக்கின்ற உரிமை என்பது கல்வி கற்றோருக்கும் பணம் படைத்தோருக்கும் மட்டும் தான் இருந்தது. அந்த சூழ்நிலையில் அவர் ஒரு பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார். 1916 ஆம் ஆண்டு இரண்டாவது தேர்தல் நடந்த போதும் கூட J.S.W. ஜெயவர்த்தனா என்பவரோடு போட்டியிட்டு இராமநாதன் வெற்றி பெற்றார். அன்றைக்கு இராமநாதன் முழு இலங்கைக்குமான முக்கிய குரலாக இருந்தார்.

1915 ஆம் ஆண்டு சிங்கள முஸ்லீம் கலவரம் நடந்தது. அது முதலாம் உலக யுத்தம் நடைபெறுகின்ற ஒரு காலப்பகுதி. ஜேர்மன் அரசை சேர்ந்த உளவு பிரிவினர் சிங்கள தரப்பிற்குள் இருந்து கிளர்ச்சியை செய்கின்றார்கள் என்கிற ஒரு வதந்தி பரவிய காலகட்டம். படுமோசமாக ஆங்கிலேய அரசாங்கம் அதை அடக்கியது. இலங்கையின் முதலாவது பிரதமராக இருந்த D. S. சேனநாயக்க உட்பட பலரை கொண்டு போய் சிறைக்குள் போட்டது. அந்த நேரம் அதற்கு எதிராக குரல் கொடுத்த முக்கிய தலைவர் சேர். பொன் இராமநாதன் தான். அது முதலாம் உலக யுத்த காலம். அவர் உடல்நிலையும் நோய்வாய்ப்பட்டிருந்த காலம். அந்த காலத்திலும் இங்கிருந்து கப்பலில் லண்டனுக்கு சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களோடு பேசி உடனடியாக இந்த கலவரத்தை எல்லாம் நிறுத்தினார். அத்தோடு சிறையில் இருந்த சிங்கள அரசியல் தலைவர்கள் எல்லோரையும் விடுவித்தார்.

விடுவித்துவிட்டு அவர் அங்கிருந்து கப்பலில் வந்து கொழும்பு துறைமுகத்தில் இறங்கினார். அவரை வரவேற்க சிங்கள அரசியல் தலைவர்கள் வந்தார்கள். துறைமுகம் முழுவதுமாக நிறைய மக்கள். தன்னுடைய வீட்டிற்கு போவதற்கு அவர் குதிரை வண்டியிலே ஏறிய பொழுது சிங்கள அரசியல் தலைவர்கள் அந்த குதிரையை கழற்றிவிட்டு தாங்களே அந்த வண்டியை காலி வீதி வழியாக இழுத்து கொண்டு அவரின் வீடு வரை கொண்டு போய் விட்டார்கள். இழுத்தவர்களில் முக்கியமானவர்கள் பிற்காலத்தில் பிரதமராக இருந்த இரண்டு பேர். ஒன்று D. S. சேனநாயக்க,

(18ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

# ஆசிரியர் பார்வை

## மக்கள் திரட்சியை எப்போது ஆக்க சக்தியாக மாற்றப் போகிறோம்?

எம் மண்ணையும் இனத்தையும் காப்பதற்காக தங்கள் இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களின் நினைவு நாள் தாயகம், தமிழ்நாடு மற்றும் புலம்பெயர் தேசமெங்கும் இலட்சக் கணக்கான மக்களின் தன்னார்வமான பங்கேற்புடன் நடந்து முடிந்துள்ளது. எமது தேசம் அனைத்து வகையான ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுபட்டு இங்கே வாழும் எம் மக்கள் இறைமையுடனும் சுயநிர்ணய உரிமையுடனும் சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழ வேண்டுமென்பதற்காக இளம் வயதுகளில் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தவர்களுக்கு மக்கள் திரண்டு இம்முறையும் வீரவணக்கம் செலுத்தி இருக்கிறார்கள்.

ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்த பின்பும் தமிழினம் அடுத்த அரசியல் நகர்வு குறித்து தடுமாறுவதாகவே தெரிகிறது. தமிழ் மக்களுக்கென்று தெளிவான அரசியல் கொள்கை, பொருளாதாரக் கொள்கை, வெளியுறவுக் கொள்கை என்பவற்றை தெளிவாக வரையறுத்து அதன் வழி நகரும் மக்களை உள்ளடக்கிய சிவில் சமூக கட்டமைப்பை வலுவாக உருவாக்கி படிப்படியாக முன்நகர வேண்டும். இதனை பல ஆண்டுகளாகவே நிமிர்வு சொல்லி வந்து கொண்டு இருக்கிறது.

கிராமங்களில் இருந்து சனசமூக நிலையங்கள், விவசாய சங்கங்கள், மீன்பிடி அமைப்புகள், மாதர் சங்கங்கள் போன்றவற்றை வலுவாக்கி அவற்றினூடாக திரட்சியை உருவாக்கி தொடர்ச்சியான உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். அன்றாட பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு மக்களுக்கு வழிகாட்டுவதன் மூலமேயே சிவில் சமூக கட்டமைப்பை உருவாக்க முடியும். வெறுமனே தேசியம் பற்றி கதைத்துக் கொண்டிருப்பது சிவில் சமூக கட்டமைப்பை நோக்கி மக்களை ஈர்க்காது.

அத்தோடு, பண்பாட்டு எழுச்சியும் மக்களை திரளாக்கும். தாங்கள் யார், இந்த தேசத்தில் தமது மொழி மற்றும் பண்பாடு என்பனவற்றின் நிலை என்ன, அவற்றின் முக்கியத்துவம் என்ன, அவற்றை பாதுகாக்க அவர்களுக்கு இருக்கும் உரிமைகள் என்ன, என்பவை தொடர்பாகவும் மக்களுக்கு வழிகாட்டுவதும் சிவில் சமூக கட்டமைப்பை உருவாக்க உதவும். மேற்குலகு, இந்தியா உள்ளிட்ட தரப்புகள் தமிழர்களுக்கு ஒரு அரைகுறை தீர்வை வழங்கி திணித்துவிட்டு இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்று இந்த விவகாரங்களை மூடி விடவே எத்தனிக்கின்றன. இப்படியான நினைவேந்தல்கள் ஊடாக தமது பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்று உலகத்துக்கு தமிழர்கள் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் முற்போக்கு சக்திகள் சிவில் சமூக கட்டமைப்பை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அதற்கான தெளிவான திட்டங்களை வகுத்து தமிழினம் முன்னோக்கி நகர மறுத்தால் எம்மின விடுதலைக்காக ஆகுதியான ஆயிரமாயிரம் மறவர்களின் ஆவி ஒரு போதும் மன்னிக்காது.





-செ. கிரிசாந்-

# அதிகரித்த புலம்பெயர்வால் துருவமயப்படுத்தப்படும் ஈழத்தமிழ் சமூகம்



செல்வின்



**இன்று ஈழத்தமிழ் சமூகம் குறிப்பாக இரண்டு முனைகளை நோக்கி துருவப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒன்று வைத்திருப்பவன், இரண்டாவது வைத்திருக்காதவன். பொருளாதார பலம், சமூக அந்தஸ்துகள் வைத்திருப்பவர்கள் ஒருபக்கமும் அவற்றை கொண்டிருக்க முடியாதவர்கள் மறுபக்கமும் என்று இரண்டு தொகுதிகளாக சமூகம் பிரிந்து கொண்டிருக்கின்றது. இதிலே புலம்பெயர் சமூகத்தின் பங்கு கணிசமான அளவு இருக்கின்றது.**

புலம்பெயர் வாழ்வில் பல சாதகமான விடயங்கள் இருக்கின்றன. 1970 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு வரை யாழ்ப்பாணத்தில் சாதியக் கட்டுமானத்தினுடைய ஆழமான பிடிப்புக்கள் இருந்த நிலைமையில் குடியிருக்கும் காணிகள் சொந்தமில்லாத மக்கள், தாங்கள் குடியிருக்கும் காணிகளில் நீண்ட காலம் வளரக் கூடியதான மரத்தை நடுவதற்கான உரிமை கூட இல்லாத மக்கள், ஆலயங்களில் நேரடியாகச் சென்று வழிபட உரிமை இல்லாத மக்கள், இப்படி பல சமூக கட்டுமானங்கள் இங்கு வேரூன்றி இருந்தன. இந்த சமூகங்களுக்கு எல்லாம் பாரம்பரியமான வறுமை சார்ந்த பொருளாதார வாய்ப்புகள் மட்டும் தான் கிடைத்தன. ஆண்டான் - அடிமை போன்ற பொருளாதார கட்டமைப்பு யாழ்ப்பாண சமூகத்திலோ அல்லது வடக்கு சமூகத்திலோ இருக்கவில்லை. பெரிய நில பிரபுத்துவ மானிய முறைமை எல்லாம் இருக்கவில்லை. உயர் சாதியினர் நிறைய நிலம் உடையவர்களாகவும் மற்றவர்கள் நிலம் அற்றவர்களாகவும் என்ற குறியீடே இருக்கவில்லை. ஆனால் கல்வியில் வாய்ப்புக்களை பெற்று ஒரு பகுதியினர் மேல் எழுந்தார்கள். கல்வியின் ஊடாக பெற்ற வாய்ப்புகளை அதிகாரங்களை செல்வ திரட்சியாக அனுபவித்தார்கள். ஏனைய மக்கள் அடிப்படை கல்வியை கூட அணுக முடியாதவர்களாக இருந்தார்கள். பரம்பரை தொழில் என்ற பெயரால் அவர்கள் எல்லைப்படுத்தப்பட்டார்கள். இது 1970 கள் வரையும் தொடர்ந்தது.

1970 களுக்கு பின் மத்திய கிழக்கின் பொருளாதாரம் திறந்த போது பெருமளவு தொழிலாளர்களை அழைத்தது. அந்த தொழிலாளர்களின் அழைப்புக்குள் சமூகத்தின் கீழ் நிலையில் இருந்தவர்கள் என்று சொல்லப்பட்ட அந்த இளம் தலைமுறையினர் புலம்பெயர்ந்தார்கள். அதன்மூலம் இந்த சமூகத்தில் மிகப்பெரிய மாற்றம் வந்தது. மத்திய கிழக்குப் பொருளாதாரம் தந்த அந்த சுபீட்சம் யாழ்ப்பாண சமூக உருவாக்கத்தில் மிகப் பெரிய தாக்கத்தை கொண்டு வந்தது. இல்லாமை காரணமாக அடிமைப்பட்டு ஏங்கி வாழ்கின்ற அந்த வாழ்க்கை முறை மாற்றி அமைக்கப்பட்டது. சொந்தமாக காணி வாங்கி வீடு கட்டி தாங்கள் விரும்பியது போன்று வாழ்க்கையை கட்டமைக்கக் கூடிய சுதந்திரம் அவர்களுக்கு இருந்தது.

மரபு ரீதியான வறுமையை அளவிடும் பொழுது குறிப்பிட்ட ரூபாவிற்கு குறைந்த வருமானம் உடையவர்கள் எல்லோரும் வறுமையானவர்கள் என்ற அளவுகோல் இருந்தது. ஆனால் இன்னுமொரு வறுமை இருக்கின்றது. அதாவது சார்பு ரீதியான வறுமை. இரண்டு அயலவர்கள் ஒன்று சேர்ந்து வாழும் போது இரண்டு அயலவர்களும் சமமான வளங்களையும் வாய்ப்புகளையும் கொண்டிருக்காவிட்டால் அந்த வாய்ப்புகளை கொண்டிருக்காத அயலவன் தன்னை மற்றவனை விட வறுமையானவனாக கீழ்நிலைப்பட்டவனாக யோசிப்பான். அங்கு ஒரு தாழ்வு சிக்கல் வரும். அதேபோல அந்த வாய்ப்புகளையும் வளங்களையும் கொண்டிருக்கின்ற மற்ற அயலானுக்கு ஒரு உயர்வுச் சிக்கல் வரும். இந்த இல்லாதவன் – வைத்திருப்பவன் என்ற விடயம் இங்கு தான் இருக்கின்றது.

மேற்கத்தேய நாடுகளுக்கு பொருளாதார அகதிகளாக புலம்பெயர்ந்து போய் அதன் மூலம் தங்களுடைய வாழ்க்கையைக் கட்டியெழுப்பிய குடும்பங்கள் பாராட்டக் கூடியவை. அவர்களின் முதல் தலைமுறையின் கடின உழைப்பு கண்ணீர் நிறைந்தது. அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அங்கீகரிக்க வேண்டும். தலைவணங்க வேண்டும். அதனால் இந்த சமூகத்தில் இருந்த இல்லாதவன் – வைத்திருப்பவன் என்ற வேறுபாடு ஓரளவுக்கு பலவீனப்படுத்தப்பட்டது.

ஆனால் புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற வாழ்க்கையை இலங்கையில் கொண்டு வந்து காட்டும் போது படாடோபமாக காட்டுவது மிகவும் ஆபத்தானது, அபத்தமானது. அங்கு கிடைக்கின்ற அந்த 1000 டொலரை இங்கு கொண்டு வந்து 200, 300 மடங்காக பெருக்கி இலங்கையில் செலவழித்து காட்டி விட்டு திருப்பி போய் அந்த கடனட்டைக்கு கடன் அடைக்கின்ற நடிப்பு வாழ்வு மிகவும் துயரமானது. துன்பகரமானது. இதை புரிந்து கொள்ளாமல் இங்கே உள்ளோரும் என்ன செய்கிறோம் என்றால் நாங்களும் அங்கே போனால் அப்படி உழைத்து இந்த தேசத்திற்கு கொண்டு வந்து இந்த தேசத்தில் இல்லாமை என்கின்ற விடயத்தில் இருந்து விடுபட்டு மேலே வரலாம் என்று யோசிக்கின்றோம்.

பொருண்மிய ரீதியான சமூக ஏற்றத் தாழ்வை உடைப்பது என்பது எங்களுக்கு மிக முக்கியமானது. ஆனால் இதில் உள்ள பிரச்சனை என்னவென்றால் எங்களுடைய மரபு சார்ந்த பொருளாதாரத்தில் தங்கி உள்ளவர்கள் தான் இன்னும் கீழ் நிலையில் இருக்கின்றார்கள். முன்பு ஒரு காலம் “சிரித்திரன்” என்று ஒரு சஞ்சிகை வந்தது. அதனுடைய ஆசிரியர் ஒருமுறை ஒரு கேலிச்சித்திரம் போட்டிருந்தார். அந்தக் கேலிச் சித்திரத்தில் முன்னுக்கு ஒருவர் நிமிர்ந்து நடந்து போகின்றார். கழுத்தில் கழுத்துப்பட்டி அணிந்து, கையில் ஒரு பெட்டியுடன் நடந்து போகின்றார். அவருக்கு பின்னால் முதியவர் ஒருவர் வேட்டியை கட்டி கொண்டு தோளில் ஒரு துண்டையும் போட்டுக் கொண்டு கை கட்டி வளைந்து நடந்து போகின்றார். அந்த கேலிச்சித்திரத்தின் கீழ் ஆசிரியர் எழுதி இருந்தார் “டை கட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லோரும் கை கட்டி பின் செல்வார்” என்று.

அரசாங்க உத்தியோகம், கல்வி போன்ற விடயங்களுக்கு ஊடாக நிரந்தர உத்தியோகம், மாத சம்பள வருமானம், ஓய்வூதியம் என்று வரும் போது நாளாந்த வாழ்வியலின் அபாயகரமான நிலைமைகளில் இருந்து விடுபட அவர்களுக்கு உத்தரவாதம் கிடைக்கிறது. அவர்கள் ஏதோ ஒரு வகையில் மேல் நோக்கி நகர்கின்றார்கள். அவர்கள் வங்கியில் கடன் கேட்டால் வங்கி உடனே கொடுக்கும். ஏனென்றால் மாத சம்பளம்

> வளமான விவசாய நிலங்கள் இருக்கின்றன, ஆனாலும் அதனுடைய மூல வேர் அறுக்கப்பட்டு சிங்கள பௌத்த இனவாதிகளால் கபளீகரம் செய்யப்படுகின்றன. இதனால் அவர்கள் இல்லாமை நிலைமைக்குள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.
> ஒரு விவசாயி எவ்வளவு தான் கஷ்டப்பட்டு கூடிய வருமானம் எடுத்தாலும் கூட வங்கி அவரை நம்பிக்கையானவராக ஏற்றுக் கொள்ளாது.


இருக்கின்றது. இங்கு ஒரு விவசாயி எவ்வளவு தான் கஷ்டப்பட்டு கூடிய வருமானம் எடுத்தாலும் கூட வங்கி அவரை நம்பிக்கையானவராக ஏற்றுக் கொள்ளாது.

எங்களுடைய பிரதேசங்களில் மரபு ரீதியான ஒரு துறை விவசாயம். விவசாயக் கூலிகளாக இருந்தவர்கள், அடுத்தது பனை சார் பொருளாதாரத்தில் தங்கி இருந்தவர்கள், அடுத்தது எங்களுடைய மீன்பிடி பொருளாதாரத்தில் தங்கியுள்ள மக்கள், இந்த மூன்று தொகுதியினரையும் விட சிறு சிறு தொழில் முயற்சியில் இருந்த கைவினை சமூகங்கள். இவர்கள் எல்லாம் நிரந்தரமான உத்தியோகத்திற்கு உரியவர்கள் அல்ல, நிரந்தரமான வசதி கூடிய உத்தரவாதம் கொண்ட தொழிலுக்கு உரியவர்கள் அல்ல. ஆனால் இவர்கள் ஆற்றல் மிக்கவர்கள். நாளாந்தம் தங்களுடைய வாழ்வியலில் அபாயங்களை எதிர் நோக்கிக் கொண்டு தான் வாழ்ந்து கொண்டே இருந்தவர்கள். அவர்களுடைய வளம் இன்னும் இந்த தேசத்தில் இருக்கிறது. பரந்த கடலும் நீண்ட கடற்கரையும் எங்களிடம் இருக்கின்றன. பல மில்லியன் பனை மரங்கள் இன்னமும் எங்களிடம் இருக்கின்றன. வளமான விவசாய நிலங்கள் எங்களிடம் இருக்கின்றன. ஆனாலும் அதனுடைய மூல வேர் அறுக்கப்பட்டு எங்களிடமிருந்து சிங்கள பௌத்த இனவாதிகளால் கபளீகரம் செய்யப்படுகின்றன. இதனால் அவர்கள் இல்லாமை நிலைமைக்குள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அண்மையில் சில ஆய்வுகள் கிராமங்களில் செய்யப்பட்டன. ஆய்வுகள் செய்யப்பட்ட எல்லா கிராமங்களிலும் போதைப்பொருள் மிக முக்கியமான பொருளாக மாறி உள்ளது. இதை யார் கையாளுவது? வெறுமனே போதைப் பொருளை தடுங்கள் தடுங்கள் என்று சொல்லிக்கொண்டு இருந்தால் மட்டும் சரியா? இந்த போதைப்பொருள் பாவனையாளர்களை எவ்வாறு நாங்கள் கையாள போகின்றோம்? அவர்களை எவ்வாறு மீட்டெடுக்கப் போகின்றோம்? அவர்களுடைய வாழ்க்கையை எவ்வாறு மீள கட்டியெழுப்ப போகின்றோம்? அந்த விடயங்களில் எங்களுடைய அரசியல்வாதிகளும், ஆன்மீக தலைவர்களும், புத்திஜீவிகளும், சமூக சிந்தனையாளர்களும், சமூக தலைவர்களும் எத்தகைய பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்ற கேள்வி முக்கியமானதாக இருக்கின்றது. இதுவரை ஒன்று, இரண்டு ஆன்மீக தலைவர்களை தவிர, வேறு யாரும் இது சம்பந்தமாக பேசியதாக இல்லை.

இங்கு என்ன நடக்கிறது? சமூகம் போதைப்பொருள் என்ற விடயத்திற்குள் ஒட்டுமொத்தமாக சிதைந்து கொண்டு இருக்கின்றது என்பதை அவதானிகள் உணர்கின்றார்கள். போதைப்பொருளை தொடர்ந்து சமூக விரோத செயல்களும், நடத்தை பிறழ்வுகளும், பாலியல் சுரண்டல்களும், வறுமை காரணமாக வருகின்ற வன்செயல்களும் பெருகிக் கொண்டே போகின்றன. இவற்றை கட்டுப்படுத்தக் கூடிய அரசியல்வாதிகள் தமக்குள் பேசி எங்களுக்குள் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்து அதை முன்னெடுக்க வேண்டும். ஆதனை இவர்கள் செய்வார்களா இல்லையா என்பது கேள்வியாக இருக்கின்றது.

சில வேளைகளில் நாங்கள் எங்களுடைய கடமைகளை கூட பிரிக்க வேண்டும். பாராளுமன்றத்தில் சிறிலங்கா பாராளுமன்ற அங்கத்தவர்கள் பேசுகின்ற விடயங்களை மறுத்து எமது நியாயங்களை சொல்லி பேசுவதற்காக எமது பாராளுமன்ற அங்கத்தவர்கள் பணியாற்றட்டும். சர்வதேச இராஜ தந்திரிகளுடன் பேசுவதற்கும் தங்களுடைய பாராளுமன்ற



அங்கத்தவர் என்கின்ற பதவியையும் பொறு ப்பையும் பயன்படுத்தி அவர்கள் அந்தப் பணிகளை செய்து கொண்டிருக்கட்டும். ஆனால் ஏனைய பணிகளை செய்வதற்காக கட்சிகள் சார்பற்ற ஒரு குழுவை நாங்கள் உருவாக்க வேண்டும். அந்த குழுவின் செயலணியில் பணியாற்றுவதற்கு சம்பளத்திற்காக அல்லாமல் சமூகத்திற்காக பணியாற்றுவதற்காக முன்வரக் கூடிய மூத்த தலைமுறையினர், முதிர்ந்த தலை முறையினர், இளந்தலைமுறையினர் அனைவ ரையும் உள்வாங்கக் கூடிய விடயத்தை விரை ந்து நாங்கள் எடுக்க வேண்டும்.

ஏனென்றால் என்னுடைய அவதானத்தில் தெரிகின்றது, பல இடங்களில் தனிப்பட்ட காணி கள் கூட நல்ல விலைக்கு விற்கப்பட்டு தமிழ் சமூகத்தின் தந்திரோபாய மையங்கள் எல்லாம் கைமாறப்படுகின்றன. தமிழ் குடும்பங்களே பெரிய பணத்தொகைக்கு ஆசைப்பட்டு இந்த விடயங்களை செய்வதாக உணர்கின்றேன். இது கிழக்கில் தொடங்கி வடக்கில் நெடுந்தீவு வரையும் நடந்து கொண்டு இருக்கின்றது. இந்த விடயங்களை நாங்கள் உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

அடுத்து, நாங்கள் இப்பொழுது சிங்கள பௌத்த தேசிய இனவாதிகள் செய்கின்றது போன்று விக்கிரகங்களை வழிபாட்டுக் குறி யீடுகளை நிலை நிறுத்துவதில் தான் முன் நிற்கின்றோம். அண்மையில் ஒரு செய்தி வந்தது, காங்கேசன்துறையில் இராணுவத்தால் விடப்பட்ட காணிகளில் இராணுவ முகாமிலிருந்து அவர்கள் தங்களுடைய உபகரணங்களை எல்லாம் எடுத்து கொண்டு வெளியேறிய போது தாங்கள் வைத்த புத்தர் சிலையையும் கொண்டு போய்விட்டார்கள். அந்த இடத்தில் யாரோ கொண்டு போய் சைவசமயத்தினுடைய சிலை ஒன்றை வைத்திருக்கிறார்கள். இங்கு மத குறியீடுகளுக்கான போராட்டம் தான் நடந்து கொண்டு இருக்கின்றது. மத விழுமியங்களை மக்கள் மத்தியில் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் எதுவுமே இல்லாமல் குறியீடுகளால் இந்த தேசத்தை ஆக்கிரமிக்கின்ற ஒரு முட் டாள்தனமான போராட்டம் தான் இங்கு முன்னெ டுக்கப்பட்டு கொண்டிருக்கிறது.

குறியீடுகள் மக்களை திருத்த மாட்டா. மக்களை மாற்ற மாட்டா. மக்களை முன் னோக்கி நகர்த்த மாட்டா. இது மிக ஆபத் தானது. எனவே சொரூபங்களையும் விக்கிரகங் களையும் ஸ்தாபிப்பதன் மூலம் மட்டும் ஏதோ ஒரு மேலாண்மையை காட்டலாம் என்பது பொய். சிங்கள பௌத்த தேசிய வாதிகள் என்ன செய்கிறார்கள்? ஒரு பௌத்த மதம் சார் குறியீடுகளை கொண்டு வந்து நிலை நிறுத்தினால் பின்பு அதற்கென ஒரு பௌத்த துறவியை அங்கு நியமிக்கிறார்கள். அவருக்கு பாதுகாப்பிற்காக இராணுவத்தை நியமிக்கிறார்கள். அவர்களுக்கு உதவியளிப் பதற்காக அனுசரணைக்காக குடும்பங்களை குடியமர்த்துகின்றார்கள். தொடர் நிகழ்வாக போகின்றது. அதன் மூலம் அந்த இடம் வியா பிக்கப்படுகின்றது.

எங்களிடம் அந்தளவு கெட்டித்தனம் கூட இல்லை. அந்தளவுக்கு தூரப்பார்வை கூட எங்களிடம் இல்லை. நாங்கள் குறியீடுகளை வைத்துவிட்டு நிலத்தை பராமரிப்பதில்லை. வைத்துவிட்டு போய்விடுவோம். விக்கிரங்களு க்கு உரிமை கோருவதில்லை. விக்கிரகம் வைப்பதாக இருந்தால் அந்த இடத்தில் மக்கள் குடியிருப்பு இருக்க வேண்டும். மக்கள் குடியிருப்பு பெருக்கப்பட வேண்டும். அந்த மையம் மக்களு க்கானதாக மாற்றப்பட வேண்டும். அப்படி எதுவுமே நாங்கள் செய்வதில்லை. நாங்கள் தவறான தர்க்கங்களை வைத்து கொண்டு போராடிக்கொண்டு இருக்கிறோம். வறட்டு நியா யங்கள் விதண்டாவாதங்களுக்கு ஊடாக நாங் கள் எங்களது காலத்தை கடத்தி கொண்டு போவது பற்றி யோசிக்கின்றோம். இந்த விட யங்களில் இருந்து நாங்கள் மாற வேண்டும்.

# இளம்தொழில் முனைவோருக்கான காணிகளை அபகரித்த அரச உத்தியோகத்தர்கள்



சோதியா

**இலங்கையில் ஊழல் நிர்வாகம் மலிந்து எவ்வாறு அரச துறைக்குள் புரையோடிப் போயுள்ளது என்பதற்கு தொழில் முனைவோருக்கான காணி வழங்கல் செயற்றிட்டம் ஒரு நல்ல உதாரணம். அரச பதவிகளை அதிகாரமிக்க ஆயுதமாக வைத்துக் கொண்டு சாமானிய மக்கள் எவ்வாறு ஒடுக்கப்படுகிறார்கள் என்பதற்கு இது தெளிவான எடுத்துக்காட்டாக இருக்கிறது.**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இராஜபக்ச அவர்களினால் 2021 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட "ஒரு இலட்சம் இளம் தொழில் முனைவோருக்கான காணி வழங்கல்" செயற்றிட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்திற்குரிய பதினொரு பிரதேச செயலக பிரிவுகளுக்குமான காணிகள் திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வள்ளுவர்கோட்டம் பகுதியில் வழங்கப்பட்டன.

இந்த காணி வழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட அவர்களின் செயற்றிட்டத்தின் தன்மைக்கு அமைவாகவும் நேர்முக தெரிவுகளின் அடிப்படையிலும் 196 இளம் தொழில் முனைவோர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கான காணிகளும் இலவச குத்தகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. அந்த காணிகளில் அவர்கள் சமர்ப்பித்த செயற்றிட்டத்தை ஒரு வருடத்தினுள் செய்து முடிக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. எனினும் அந்த செயற்றிட்டத்தின் ஒரு வருடகால உடன்படிக்கை நிறைவு பெற்றும் கூட எதிர்பார்க்கப்பட்டபடி செயற்றிட்டத்தின் நோக்கம் பூர்த்தி செய்யப்படவில்லை. 196 பயனாளர்களில் அண்ணளவாக 15 பயனாளர்களே இந்த காணிகளை ஓரளவுக்கேனும் பயன்படுத்தி பராமரித்து வருகிறார்கள். ஏனைய பயனாளர்களின் காணிகள் பராமரிப்பற்று காணப்படுகின்றன.

> அரச சார்பானவர்களுக்கே பெருமளவில் காணிகளை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இரண்டு வருடமாகியும் ஒன்றுமே செய்யவில்லை. எங்கள் கைகளில் இந்த காணிகளை ஆறு மாத காலம் தாருங்கள், நீங்கள் கொண்டு வந்த திட்டத்தை செய்து காட்டுகிறோம்.

இதற்கான பிரதான காரணமாக இருப்பது காணி பகிர்ந்தளித்ததில் இருந்துள்ள ஊழலே என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். வழங்கப்பட்ட காணிகளில் பெரும்பான்மையானவை அரச ஊழியர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். அதனால் இந்த காணிகள் பராமரிப்பற்று இருப்பதாகவும் இதனை சரியான முறையில் பகுப்பாய்வு செய்து தகுதி உடைய பயனாளர்களுக்கு பெற்று கொடுக்கு மாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக கார்த்திகை 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளனர். அதில் கலந்துகொண்ட சிலர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு.

**ஒருங்கிணைந்த பண்ணையை ஆரம்பிக்கவே காணி தேவை!**
**தனுசியா – பெரியகுளம்**

நான் பெரியகுளம் கிராமத்தில் வசிக்கிறேன். எனக்கு மூன்று பிள்ளைகளும் உள்ளனர். நான் திருமணம் முடித்து 14 வருடங்களான போதும் இதுவரையில் அரசாங்கத்தினால் எந்தவித நன்மையையும் பெற்றுக் கொள்ளவில்லை. நான் வாடகை கொடுத்து ஒருங்கிணைந்த பண்ணை ஒன்றை செய்து வந்தேன். கொரோனா காலப்பகுதியில் உணவிற்கு சிரமப்படாமல் வாழ்ந்தது அந்த பண்ணையினாற்தான். அந்த காலப்பகுதியில் தான் இளைஞர்களுக்காக ஒரு இலட்சம் காணிகள் கொடுக்கப்பட உள்ளது என்று இந்த திட்டம் வந்தது. அப்போது எனக்கு 23 வயது. நானும் இதற்காக விண்ணப்பித்திருந்தேன். கொரோனா காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக பண்ணையை மீள செய்வதற்கான பணம் செலவழிந்து போய்விட்டது. அதனால் வாடகை கொடுத்து பண்ணையை தொடர்ந்து செய்ய முடியாமல் போய் விட்டது.

எங்களுக்காக தானே இந்த திட்டம் வந்தது. ஆகவே எனக்கும் இந்த காணியை தந்திருந்தால் வாடகை, முற்பணம் எதுவுமின்றி நான் பண்ணையை மீள ஆரம்பித்திருப்பேன். நான் எனது ஒருங்கிணைந்த பண்ணையை மீள தொடங்க வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கிறேன். எங்களுக்கு ஆர்வம் இருக்கிறது. நாங்கள் படிக்கும் போது இயற்கை முறையில் ஒருங்கிணைந்த பண்ணையை எப்படி செய்யலாம் என்று சொல்லி தந்த விடயங்கள் நன்றாகவே மனதில் பதிந்திருக்கின்றன.

ஏற்கனவே அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இந்த காணிகள் இந்த இரண்டு வருட காலமும் பயன்படுத்தப்படாமல் இருந்தமையால் அதில் ஒரு காணியை எடுத்து நாங்கள் துப்பரவு செய்து இருக்கிறோம். நாங்கள் அரசாங்கத்திடம் கேட்பது எங்களிடம் இந்த காணியை உத்தியோகபூர்வமாக தாருங்கள், நீங்கள் கொண்டு வந்த திட்டத்தை செய்து காட்டுகிறோம் என்பதைத்தான்.

முதலில் காணிகளை பெற்றவர்கள் இவ்வளவு காலமும் ஏதும் செய்யாமல் இருந்து விட்டு, நாங்கள் இந்த காணியை பயன்படுத்தப் போகிறோம் என்று தெரிந்தவுடன், இப்போது தென்னம்பிள்ளையை கொண்டு வந்து நடுகிறார்கள். சிலர் காணியை உழுது விட்டு போகிறார்கள். இவ்வளவு காலமும் வர முடியாத உங்களால் இப்போது எப்படி வர முடிகிறது? இவர்களால் இரண்டு வருடங்கள் செய்ய இயலாதவற்றை நாங்கள் செய்து காட்டுகிறோம். எங்கள் கைகளில் இந்த காணிகளை ஆறு மாத காலம் தந்து பாருங்கள். எங்களால் செய்து காட்ட முடியும்.

**காணிகளை தந்தால் தோட்டங்களை செய்து அன்றாட வாழ்வாதாரத்தை ஈட்டலாம்!**
**சுகந்தா – கேணியடி**

அரசாங்க சார்பானவர்களுக்கே பெருமள

வில் காணிகளை கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் இரண்டு வருடமாகியும் ஒன்றுமே செய்யவில்லை. நாங்கள் இந்த பகுதிக்கு வந்து கிட்டத்தட்ட 7 - 8 மாதங்கள் ஆகின்றன. சின்ன பிள்ளைகளையும் கொண்டு வந்து எவ்வளவோ கஷ்டப்படுகிறோம். எங்களுக்கென்று வாழ்வாதாரம் எதுவுமே இல்லை. இந்த காணிகளை தந்தால் தோட்டங்களை செய்து அன்றாடம் எங்கள் வாழ்வாதாரத்தை ஈட்டக் கூடியவாறு இருக்கும். ஆகவே தயவுசெய்து இந்த காணியை தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**காணிகளை குறுகிய கால அவகாசத்திலாவது தந்து பாருங்கள்!**
**ரிஷாலினி – கேணியடி**

வெறுமையாக இருந்த காணியை தான் நாங்கள் எடுத்தோம். அந்த காணியை துப்பரவு செய்து வேலி அடைத்து கொட்டில் போட்டு இருக்கிறோம். அதில் தென்னம்பிள்ளையும் வைத்திருக்கிறோம். இப்படி இருந்த போது 17 ஆம் திகதிக்கு பிறகு தான் உங்களுக்கு பதில் சொல்வோம் என்று மாவட்ட செயலாளர் சொன்னதாக சொல்லி பொலிசார் துரத்தி விட்டு கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினால் எங்களை வெளியே போக சொல்லி எழுத்து மூலமாக எதுவும் தரவில்லை. ஆனால் பொலிசார் விரட்டுகிறார்கள். ஆனால், காணியின் உடைமையை பெற்றவர்கள் இப்போது உள்ளே போகிறார்கள், காணியை துப்பரவு செய்கிறார்கள். இவ்வளவு காலம் வராதவர்கள் தற்போது வருகிறார்கள். அவர்கள் போக முடியுமானால் நாங்களும் போக முடியும்.



எங்களை பொலிசார் விரட்டியதன் பின்பு தான் நாங்கள் இந்தப் போராட்டத்தை தொடங்கி செய்து கொண்டிருக்கிறோம். ஏனென்றால் 17 ஆம் திகதி அவர்கள் என்ன பதில் சொல்ல போகிறார்கள் என்று எங்களுக்கு தெரியவில்லை. எங்களுக்கு இந்த இடங்களை தர வேண்டும். நாங்கள் பயிர் செய்ய வேண்டும். இதுவரையில் அரசாங்கத்தினால் ஒரு உதவியும் கிடைத்ததில்லை. எங்களுக்கு ஒரு குறுகிய காலம் அவகாசம் தந்து காணியை தாருங்கள், நாங்கள் திறம்பட செய்து காட்டுகிறோம்.

**அரச உத்தியோகத்தருக்கு கொடுக்கப்பட்டு காடாக இருந்த காணியை நான் துப்பரவாக்கி பயன்படுத்துகிறேன்! - நிராஜ்**

இந்த காணிகள் இளம் தொழில் முயற்சியாளர்களுக்காக கொடுக்கப்பட்டவை. ஆனால் 85 வீதமானவற்றை அரச உத்தியோகத்தர்கள் தமது உறவினர்களின் பெயரில் எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு வருட காலமாக அந்த காணிகளுக்குள் எதுவும் செய்யவில்லை. சில காணிகளில் வேலி மட்டும் இருக்கிறது. பல காணிகள் வேலியும் இல்லாமல் காடாக இருக்கின்றன. அப்படியான காணிகளை தான் நாங்கள் மக்கள் எல்லோரும் சேர்ந்து விவசாயம் செய்வதற்காக, அதாவது என்ன திட்டத்திற்காக இந்த காணிகள் வழங்கப்பட்டதோ அதனை செய்ய முற்படுகிறோம். அவர்களால் அதனை நிறைவேற்ற முடியாமல் போயிற்று. ஆனால் நாங்கள் அதை நிறைவேற்றுவோம்.

இங்கு கடைசி காணி பகுதியில் பண்ணை செய்கிறார்கள், இன்னுமொருவர் 200 மா கன்றுகள் வைத்து கையால் தண்ணீர் ஊற்றி பராமரித்து வருகிறார். இப்படியாக சில பேரை குறிப்பிட்டு சொல்ல முடியும். இப்படி சிலர் செய்யும் போது ஏன் மற்றவர்களால் செய்ய முடியாமல் போனது? அவர்களுக்கு காணிக்கான தேவை இல்லாததால் செய்யவில்லை. நான் துப்பரவு செய்து பராமரிப்பதும் ஒரு அரசாங்க வேலை செய்கின்றவரினது காணி தான். நாங்கள் வீடு கட்டுவதற்கு கேட்கவில்லை. எங்களுடைய வாழ்வாதாரத்திற்கு பயிரோ பண்ணையோ செய்வதற்கு தான் கேட்கிறோம்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் எடுத்து வைத்து பயன்படுத்தாமல் இருக்கின்ற காணியை தான் நாங்கள் எடுத்து பராமரிக்கிறோமே தவிர இன்னுமொருவர் பராமரித்து வருகின்ற காணியை நாங்கள் எடுக்கவில்லை. இந்த காணிகள் வழங்கப்பட்டு ஒரு வருடகால செயற்றிட்ட காலம் நிறைவு பெற்று மேலும் ஒரு வருட காலமும் கடந்து விட்டது. ஆனால் காணியில் எதுவும் செய்யவில்லை.

இந்த அரச உத்தியோகத்தர்கள் தங்களின் காணி, தங்களின் உறவினரின் காணி என்று சொல்ல மாட்டார்கள். தாங்கள் கொடுத்த பயனாளர்களின் காணிகளை அடாவடியாக பிடிக்கிறார்கள் என்று தான் இவர்கள் தகவலை கொடுப்பார்கள். உண்மையான விடயம் என்னவென்று பிரதேச செயலாளருக்கோ, மாவட்ட செயலாளருக்கோ, ஆளுநருக்கோ தெரியாது. நேரடியாக கள விஜயம் மேற்கொண்டால் தான் உண்மை என்னவென்று தெரியும். ஏன் இப்படி நடந்திருக்கிறது என்று சரியாக விசாரிக்க வேண்டும். எங்களுக்கு ஆறு மாதம் தாருங்கள், நாங்கள் பயன்படுத்தாமல் விட்டால், எங்களிடம் இருந்து பறித்து நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் கொடுங்கள்.

**எனது சுய தொழிலை மேம்படுத்துவதற்கு எப்படியாவது இந்த காணியை பெற்று தர வேண்டும்!- விஜயராணி**

எனக்கு நான்கு பிள்ளைகள், அதில் ஒருவர் மாற்றுத்திறனாளி. கணவரும் தனிப்பட்ட பிரச்சனை காரணமாக பிரிந்து விட்டார். நான் இருப்பிடமாக சிறிய காணி துண்டுக்குள் இருக்கிறேன். 4 வருடமாக எனது பெண் பிள்ளை தான் எனது குடும்பத்தை பார்த்து வருகிறார். நான் அரிசிமா அரைத்து விற்கிறேன். அதில் ஒரு சிறிய தொகை கிடைக்கிறது. நான் எனது பண பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக காணி ஒன்றை தரும்படி கிராம சேவையாளர் ஊடாக கதைத்தும் கடிதங்கள் கொடுத்தும் கிடைக்கவில்லை. காணி பெற்று கொள்ள கூடிய வகையில் நான் செயற்றிட்டம் ஒன்றை முன்வைத்தும் என்னை கச்சேரியால் காணிக்காக நேர்முகத் தேர்வுக்கு கூப்பிடவில்லை.

மாவட்ட செயலாளர் இந்த விடயத்தில் அலசி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே காணியை பயன்படுத்திய மிக சிலர் தவிர்ந்த ஏனையோருக்கான காணி அனுமதியை இரத்து செய்து அதனை உண்மையாக கேட்டுள்ள பயனாளிகளுக்கு பகிர்ந்து வழங்க வேண்டும்.

**தற்சார்பு பொருளாதாரத்தை முன்னெடுக்க அடிப்படையானவை காணிகளே!**
**பொதுமகன் - சிவபுரி**

என்னை போல தேவைப்பாடு உடைய பயனாளர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்குமாயின் நிச்சயமாக இந்த காணிகளின் நிலை திறம்பட இருந்திருக்கும். இவ்வாறு கொடுக்கப்பட்ட காணிகளில் 14 காணிகள் இரத்து செய்யப்பட்டும் உள்ளதாக அறிந்தேன். தற்போது நான் பராமரிக்கின்ற காணியும் உடைமையாளரிடமிருந்து பிரதேச செயலாளரால் மீள வேண்டி எடுக்கப்பட்ட காணி தான்.

நான் பயிர், கால்நடை வளர்ப்பு செய்யலாம் என்ற எண்ணத்தில் தான் இந்த பகுதிக்குள் ஒரு வருடத்திற்கும் மேலாக சென்று வருகிறேன். இந்த காணியின் உடைமையாளர் இல்லாததாலும் இரத்து செய்யப்பட்டது என்பதை அறிந்ததாலும் பெரும் காடாக இருந்த Lot-N குறியீட்டிற்குரிய காணியை துப்பரவு செய்து வேலி அடைத்து தற்போது தானியப்பயிரும் விதைத்திருக்கிறேன். இந்த விடயங்களை பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தி உள்ளேன். எனக்கு இந்த காணி அவசியமாக தேவைப்படுகிறது. என்னிடம் முருங்கை வளர்ப்பு, பல பயிர் சாகுபடி, இயற்கை பசளை தயாரிப்பு என நிறைய வேலைத்திட்டங்கள் இருக்கின்றன.

தற்சார்பு பொருளாதாரமாக எங்கள் வாழ்வியலை மாற்ற வேண்டும் என்பதே எனது அவா. எனக்கு 6 மாத காலமே போதுமானது. அதற்குள் நான் செய்ய தவறும் பட்சத்தில் நானாகவே இந்த காணியை விட்டு வெளியேறி அரசாங்கமே காணியை எடுத்து கொள்வதற்கும் இணங்குகிறேன். எனவே மாவட்ட செயலாளர் தங்கள் நேரடி கண்காணிப்பில் மீள் ஆய்வுக்கு உட்படுத்தி நடந்தேறிய மாபெரும் ஊழலையும் கண்டறிய வேண்டும். அதேவேளை களவாடப்பட்டுள்ள இந்த காணிகள் உரிய பயனாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



கலாநிதி கு.குருபரன்

# அரச பல்கலைக்கழகங்களில் பேச்சுரிமை



**யா**ழ்ப்பாணம் சட்டம் மற்றும் கொள்கைகளுக்கான கற்கை நிலையம் தமிழ் பொதுப்பரப்பில் சமகாலத்தில் விவாதிக்கப்படும் விடயங்கள் தொடர்பிலே ஒரு ஆழமான உரையாடல் தேவை என்ற அடிப்படையிலே அறம் பேசு என்ற காணொளி தொடரை வெளியிட்டு வருகிறது. அதில் அரச பல்கலைக்கழகங்களில் பேச்சுரிமை என்ற தலைப்பில் கலாநிதி கு.குருபரன் வழங்கிய உரையை வாசிப்புக்காக எழுத்து வடிவில் தருகிறோம்.

அரச பல்கலைக்கழகங்களில் கருத்து சுதந்திரம் தொடர்பாக பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் கடந்த இரு வாரங்களாக தமிழ் பொதுப் பரப்பிலே பேசப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே. இந்த விவாதம் ஆழப்படுத்தப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக அது தொடர்பாக என்னுடைய சில கருத்துக்களை நான் முன்வைக்கின்றேன்.

பல்கலைக்கழகங்கள் அறிவிற்கான இடங்கள். அறிவை தேடுவதற்கான இடங்கள். புலமைத்துவ தேடலுக்குரிய (academic inquiry) இடங்கள். இந்த இடங்களிலே இந்த விடயம் தான் பேசப்படலாம் இந்த விடயம் பேசப்பட கூடாது என்ற விடயம் இருக்க கூடாது என்று பொதுவாக சொல்வார்கள். பேசினால் தான் விவாதித்தால் தான் மெய்ப்பொருள் காணப்படலாம். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினுடைய மகுட வாசகம் "மெய்ப்பொருள் காண்பது அரிது" என்பது.

எல்லா விதமான கருத்துகளும் வந்தால் தான் அந்த கருத்துகள் பேசப்பட்டு விவாதிக்கப்படலாம்; தனி நபர்கள் தமது கருத்துகளை தமது நிலைப்பாடுகளை முன்வைத்து விவாதிக்கலாம்; மாணவர்கள் தங்களுடைய சிந்தனைகளை வளப்படுத்தி கொள்ளலாம். பொதுவாக தாராண்மைவாத சமூகம் (liberal society) ஒன்றிலே பல்கலைக்கழகங்களின் வகிபாகம் என்ன என்பதன் பார்வை இதுதான். இன்னும் தெளிவாக சொல்லப்போனால் பல்கலைக்கழகங்கள் சிந்தனைகளுக்கான ஒரு திறந்த சந்தையாக இருக்க வேண்டும், என்று கருத்துச் சொல்பவர்கள் இருக்கிறார்கள்.

அடிப்படையிலே இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளலாம். அதாவது பல்கலைக்கழகங்கள் என்பவை புலமைத்துவ சுதந்திரமும் புலமைத்துவ தேடலுக்கும் உரிய இடங்களாக இருக்கும் பட்சத்தில் அதில் சில விடயங்கள் பேசப்படக் கூடாத விடயங்கள் என்று இருப்பது அந்த அறிவினுடைய விசாலமான தேடலுக்கு எதிரான ஒன்று என்பதனை நாங்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளலாம். குறிப்பாக ஏனைய வெளிகளை விட பல்கலைக்கழகத்திலே இருக்கக் கூடிய கருத்துச் சுதந்திரமானது இன்னும் விசாலமாக இருக்க வேண்டும். ஏனெனில் அறிவுத் தேடல் எனும் சிறப்பு கைங்கரியத்தை செய்யும் இடத்திலே கருத்துகளுக்கான மட்டுப்பாடுகள் இருக்க கூடாது என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள்.

மேலும் குறிப்பாக நீங்கள் விரும்பாத அல்லது உங்களை ஆச்சரியத்திற்கு உட்படுத்துகின்ற அல்லது உங்களை காயப்படுத்துகின்ற கருத்துகள் கூட பேசப்பட வேண்டும். ஏனென்றால் அவ்வாறான கருத்துகள் வருகின்ற போது தான், கருத்து கருத்தோடு மோதுகின்ற போது தான் கருத்துகள் செழிமைப்படுத்தப்படும் என்ற விடயம் முன்வைக்கப்படுகிறது. தாராண்மைவாத அரசியல் சமூகத்தில் (liberal political society) பல்கலைக்கழகத்தின் பங்கு என்னவென்று பார்க்கும் போது இந்த கருத்து முன்வைக்கப்படுகிறது. இதில் நாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிச்சயமாக இருக்கின்றன. என்னைப் பொறுத்தவரையிலும் தனிப்பட்ட ரீதியாக கருத்துகளுக்கு நிச்சயமாக இடம் இருக்க வேண்டும். அவை பேசப்பட வேண்டும். அனைத்து கருத்துகளுக்கும் இடம் இருக்க வேண்டும். ஆனால் இதற்கு மட்டுப்பாடுகள் இருக்கிறதா என்ற கேள்வி இருக்கிறது.

அமெரிக்காவில், இங்கிலாந்து உட்பட மேற்கு ஐரோப்பாவில் கடந்த இரண்டு தசாப்தங்களாக குறிப்பாக பல்கலைக்கழகங்களில் "மேடை மறுப்பு" (No Platforming) என்று சொல்லப்படுகின்ற ஒரு விடயம் நடந்தேறுவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. அதாவது சிலருக்கு நாங்கள் மேடை அமைத்து கொடுக்க கூடாது. அதனுடைய இரண்டாவது பாகமாக ஒருவரை பேச அழைத்தால் அவருக்குரிய அழைப்பை மீள பெறுகின்றதும் வாடிக்கையாக நடந்து வருகின்ற விடயமாக இருக்கிறது. இதனை பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட வலதுசாரி மாணவ இயங்கங்களும் செய்கின்றன. இடதுசாரி இயக்கங்களும் செய்கின்றன. உதாரணமாக வலதுசாரி மாணவர் அமைப்பு என்று சொல்பவர்கள் இடதுசாரி கருத்துகளோடு வருபவர்களை பேச விடுவதில்லை. அல்லது இடதுசாரி தன்மையாக வருகின்ற, உதாரணமாக தற்போது பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக பேசுகின்றவர்களை பல்கலைக்கழகத்திற்குள் பேச விடுவதில்லை. இஸ்ரேலிற்கு ஆதரவான போக்கை காட்டுகின்ற தன்மை வலதுசாரி போக்கு. மற்றைய போக்கு இடதுசாரிகள் மத்தியிலும் இருக்கிறது. இது தொடர்பாக அங்குள்ள அரசாங்கங்களும் இதனை மிகக் கவனமாக பார்க்கிறார்கள்.

பெண்ணிய கருத்துகளுக்கு எதிரானவர்கள், காலநிலை மாற்றம் இடம்பெறவில்லை என்று சொல்பவர்கள் (climate change deniers), ஜெர்மனியில் யூத இனத்தவர்கள் அழிக்கப்படவில்லை என்று சொல்கின்றவர்களுக்கு நாங்கள் இடம் கொடுக்க

**கருத்துகளை பொறுத்து தான் இந்தக் கருத்துகளை அனுமதிப்பதா இல்லையா என்பது ஆராயப்படும். அறிவுத் தேடல் கூடுகின்றதா இல்லையா என்பதுனை நாங்கள் பார்க்க வேண்டும். ஆகவே பரப்புரைக்காக பல்கலைக்கழகத்தை மேடையாக்க விரும்புபவர்களுக்கு நாங்கள் நிச்சயமாக இடமளிக்க வேண்டிய அவசியம் இல்லை.**

கூடாது. இவை போன்ற விடயங்களிலே அப்படியானவர்களை அழைத்துப் பேசுவதற்கு அவர்களுடைய கருத்துகளை கேட்பதற்கு கூட இடம் கொடுக்க கூடாது என்ற ஒரு பார்வையிலே செயற்படுகின்ற மாணவர் இயக்கங்கள் இயங்குகின்றன. அவர்கள் பல்வேறு நபர்களை அவ்வாறாக பல்கலைக்கழகத்திற்குள் அழைக்காமல் விட்டிருக்கிறார்கள். விடுக்கப்பட்ட அழைப்பை மீள வாங்குவதற்கு அழுத்தம் பிரயோகித்திருக்கிறார்கள்.

இதில் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியதாவது, உதாரணமாக யூதர்களுக்கு எதிராக இனப்படுகொலை நடைபெறவில்லை (holocaust deniers) என்று சொல்வதே ஒரு குற்றமாக பல மேற்கத்தேய நாடுகள் ஆக்கி வைத்திருக்கின்றன. அப்படி சொல்பவர்களை குற்றவியல் சட்டத்தின் கீழே கொண்டு வரலாம் என்ற விடயம் கூட இருக்கின்றது. அதே போன்று பல்கலைக்கழகத்திலே காலநிலை மாற்றம் என்பது நடைபெறவில்லை, அது மனிதர்களால் ஏற்படுத்தப்படுவது இல்லை, அது இயற்கையானது என்று சொல்கின்ற ஒரு கருத்தானது விஞ்ஞானத்திற்கு எதிரானது. அது விஞ்ஞான நெறிமுறைகளுக்கு அப்பாற்பட்டது. ஒரு அரசியல் சித்தாந்தத்தின்பாற்பட்டது. குறிப்பாக பல்தேசிய நிறுவனங்களின் (corporate companies) முதலாளிகளினுடைய நலன்களுக்காக செய்யப்படுவது. அவர்களை பல்கலைக்கழகத்திற்குள் விட கூடாது என்பதிலும் பொதுவாக ஒரு கருத்து ஒற்றுமை இருக்கிறது.

ஆகவே, சில கருத்துகள் பேசப்படவே கூடாது என்பதில் இன்று "கருத்துகளை பேச வருபவர்களின் கருத்து சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது" என்று சொல்கின்றவர்கள் கூட இதற்கு இணங்குவார்கள். அதாவது இடதுசாரிகள் முற்போக்காளர்கள் இணங்குவார்கள். காலநிலை மாற்றத்தை இல்லை என்று சொல்பவர்களுக்கும் இனப்படுகொலை நடைபெறவில்லை என்று சொல்பவர்களுக்கும் பாலின சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற விடயத்தை மறுத்து பேசுகின்றவர்களுக்கும் பல்கலைக் கழகத்திலே வாய்ப்பு கொடுக்க கூடாது என்று சொல்லுகின்ற நிலைப்பாட்டில் அவர்கள் இணங்கி வர கூடும். ஆகவே கருத்துகளை பொறுத்து தான் இந்தக் கருத்துகளை அனுமதிப்பதா இல்லையா என்பது ஆராயப்படும்.

உதாரணமாக நான் கேட்கிறேன், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாணத்தில் தற்போது தீவிரமாக இந்துத்துவ அரசியல் பேசும் நபர் ஒருவரை அழைத்தால், அதற்கு எதிராக மாணவர் போராடி அவரால் பேச முடியாத சூழல் ஏற்பட்டால் அவருடைய கருத்து சுதந்திரம் மீறப்பட்டதாக இந்த முற்போக்காளர்கள் கருதுவார்களா? அல்லது யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் முன்னாள் ஆவா குழு தலைவரும் தற்போது அரசியல் செயற்பாட்டாளராகவும் இருக்கின்ற ஒருவரை பேசுவதற்கு அழைத்தால் மாணவர்கள் போராடி அவரை வர வேண்டாம் என்று தடுத்தால் அதற்கு இந்த முற்போக்காளர்கள் அவருடைய கருத்து சுதந்திரம் மீறப்பட்டுள்ளதாக சொல்வார்களா? இன்னும் கொஞ்சம் தாண்டிப் போய் இந்திய நாட்டின் பிரதம மந்திரி அல்லது பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவரை அழைத்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே பேசவிட வேண்டும் என்று சொல்கின்ற போது, இந்துத்துவ அரசியலை முன்னெடுத்து, முஸ்லீம்களை அடக்கி ஒடுக்கி அவர்களுக்கு எதிரான அரசியலை செய்கின்ற ஒரு நபரை பல்கலைக்கழகத்திற்குள் அழைத்து பேச விட

கூடாது என்று மாணவர்கள் போராடி அதனை தடுக்கும் பட்சத்தில் அதுவும் குறித்த பாரத பிரதமர் அல்லது பாரதிய ஜனதா கட்சியின் தலைவரை பேச விடாமல் தடுத்தது கருத்து சுதந்திரத்திற்கு முரணானது என முற் போக்காளர்கள் கூறுவார்களா?

ஆகவே கருத்தை பொறுத்து தான் அந்த கருத்துக்கு சுதந்திரம் வேண்டுமா அல்லது எல்லா கருத்துகளுக்கும் இடம் வேண்டுமா என்று நாங்கள் தெளிவாகவும் ஆழமாகவும் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது.

நாங்கள் அவ்வாறானவர்களை அழை க்கவே கூடாது என்பது எந்த அடிப்படையில் சொல்லப்படுகின்றது? புலமைத்துவ தேடலு க்கு அப்பாற்பட்ட வெறுமனே சித்தாந்த அடிப்ப டையிலும் கருத்தியல் அடிப்படையிலும் சொல் லப்படுகின்ற கருத்துகளிற்கு இடம் கொடுக் கப்படக் கூடாது. அதனால் அறிவு தேடல் விசாலமடைவதில்லை. அவை வெறும் பரப் புரை கூட்டங்களாக அமையும் என்கிற அடிப் படையிலே அதனை பல்கலைக்கழகங்களில் அனுமதிக்க கூடாது என்கிற ஒரு பார்வை பொதுவாக இருக்கிறது.

ஆகவே பல்கலைக்கழகங்கள் வெறுமனே பேச்சு சுந்திரத்தினுடைய வரையறைக்குள் நின்று பார்க்கப்பட வேண்டிய விடயங்கள் மாத்திரம் அல்ல. ஒரு பல்கலைக்கழகங்களினுடைய அறிவுத்தேடலுக்கு உட்பட்ட, 'துறைசார் எல் லைகள்' (disciplinary boundaries) என்று சொல் வார்கள், அந்த எல்லைக்கு அப்பாற்பட்டு, அதற்குரிய செயற்படிமுறைகளுக்கு (methodo logy) அப்பாற்பட்டு வெறுமனே பரப்புரை நோக்கத்திற்காக முன்வைக்கப்படுகின்ற கரு த்துகளை ஒருவர் பேச விரும்புகின்ற போது அவருக்கு மேடை அமைத்து கொடுக்க வேண் டிய அவசியம் இல்லை என்பதும் பொது வாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்த வித்தி யாசத்தை நாங்கள் கவனிக்க வேண்டும்.

உதாரணமாக முதலாளித்துவ பொருளா தாரத்தை விதந்து, சமூக பாதுகாப்பு தேவை யில்லை என்று பேசுகின்ற ஒருவரை பல்கலைக் கழகத்தில் பேச அழைக்கலாம். ஆனால் அவர் தர்க்கத்தின் அடிப்படையிலும் பொருளாதார புலமைத்துவ விடயத்திலே அதற்குரிய வழி முறையை பாவித்து தன்னுடைய கருத்தை முன்வைக்க கூடிய நபராக இருந்தால் அவரை அழைக்கலாம். அதை விடுத்து அதனை ஒரு அரசியல் கருத்தியலாக எடுத்து பேச வருபவருக்கு பல்கலைக்கழகத்திலே நாங்கள் இடமளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற விடயம் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆகவே பல்கலைக்கழகத்திலே யாரை அழைக்கின்றோம் என்று பார்க்கின்ற போது, அந்த அறிவு தேடலுக்கு அவர் வைத்திருக்கின்ற நிலைப்பாடு உதவுமா இல்லையா என்பதல்ல பார்க்க வேண்டியது. அவர் பேசுகின்ற வகை அதை முன்வைக்கின்ற முறையில் அறிவுத் தேடல் கூடுகின்றதா இல்லையா என் பதனை நாங்கள் பார்க்க வேண்டும். ஆகவே பரப்புரைக்காக பல்கலைக்கழகத்தை மேடை யாக்க விரும்புபவர்களுக்கு நாங்கள் நிச்ச யமாக இடமளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை சொல்ல வேண்டும்.

இறுதியாக நாங்கள் இந்த விடயத்திலே தொட்டுச் செல்ல வேண்டிய இன்னுமொரு விடயமும் இருக்கிறது. கருத்துச் சுதந்திரம் என்கின்ற போது எல்லா கருத்துகளுக்கும் சுதந்திரம் அல்ல.

ஹேபட் மார்கியூஸ் (Herbert Marcuse) என்ற மிக முக்கியமான மாக்சிய சிந்தனையாளர் ஒருவர் இருக்கிறார். அரசியல் கருத்துகள் யாவற்றுக்கும், அதாவது உண்மையாக எல்லா விதமான அரசியல் கருத்துகளுக்கும் இடமில் லாத சூழலில் கருத்துச் சுதந்திரம் பேசப்படுகின்ற போது எந்தக் கருத்தின் பின்னால் அதிகாரம் இருக்கின்றதோ அதற்கான சுதந்திரமாகத் தான் கருத்துச் சுதந்திரம் அமைந்து விடும் என்ற விடயத்தை அவர் சொல்லுகின்றார். கருத்துகளுக்கு வழங்கப்படும் பாரபட்சமற்ற சகிப்புத்தன்மை (indiscriminate tolerance) என் பது உண்மையில் அதிகாரத்துக்கு சேவகம் செய்யும் என்பதே தவிர உண்மைக்கு சேவகம் செய்யாது என்கிறார். அதாவது அனைத்துக் கருத்துகளையும் நாங்கள் ஏற்க வேண்டும் பொறுத்துக் கொள்ள வேண்டும், கேட்க வேண்டும் என்று சொல்கின்ற பொழுது உண்மையில் எந்த கருத்துகளுக்கு இடமளிப்பது?

உதாரணமாக இன்றைய அரச பல்

> பாரபட்சமற்ற சகிப்புத்தன்மையை கேட்பவர்கள் யோசிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், அரச பல்கலைக்கழகங்களில் அனைத்து கருத்துகளுக்கும் உண்மையாக சமனான இடங்கள் இருக்கின்றனவா என்று.


கலைக்கழக சூழலில் சில கருத்துகளை சொல்லவே முடியாது. அரச பல்கலைக்கழகங்களால் ஜீரணிக்கக் கூடிய கருத்துகளுக்கு மாத்திரம் தான் கருத்துச் சுதந்திரம் என்றால் அது அதிகாரத்திற்கான கருத்துச் சுதந்திரமே ஒழிய உண்மையை தேடுவதற்கான கருத்துச் சுதந்திரம் இல்லை என்பதனையும் பார்க்க வேண்டும். ஆகவே ஒரு முழுமையான அர்த்தத்தில் கருத்துகளுக்கான சுதந்திரம் (freedom of expression) இல்லாத இடத்தில் தனியே பேசுவதற்கான சுதந்திரம் (freedom of speech expression) என்று நாங்கள் குத்தி முறிஞ்சால் அது அதிகாரத்தோடு நிற்கக்கூடிய freedom of speech க்கு மட்டும் தான் நாங்கள் இடத்தை கொடுக்கிற ஆட்களாக இருப்போம். எங்களுடைய அரச பல்கலைக்கழகங்களின் சூழலில் சில கருத்துகளை பேசுவது சாத்தியமே இல்லை. அரச பல்கலைக்கழகங்களில் அவற்றை நிர்வகிப்பவர்களின் கருத்தியலுக்கு விரோதமில்லாத கருத்துகளுக்கு மாத்திரமான கருத்துச் சுதந்திரம் எனும்போது அங்கு ஒரு சமனற்ற தன்மை இருக்கிறது.

இவ்வாறாக, பாரபட்சமற்ற சகிப்புத்தன்மையை கேட்பவர்கள் யோசிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், அரச பல்கலைக்கழகங்களில் அனைத்து கருத்துகளுக்கும் உண்மையாக சமனான இடங்கள் இருக்கின்றனவா என்று. அப்படியில்லாவிட்டால் அதனை மாற்றுவதற்கு அந்த பல்கலைக்கழகங்களில் அவர்கள் பேசுகிறார்களா என்பதை பார்க்க வேண்டும்.

அரச பல்கலைக்கழகங்கள் ஒரு கட்சியினுடைய அரசியலின் அல்லது ஒரு குறிப்பிட்ட அரசியல் தத்துவத்தின் அல்லது பேரினவாத அரசியலின் நீட்சியாகவோ இருப்பதைக் கண்டிக்காதவர்கள் அந்த சூழலுக்குள் ஒரு குறிப்பிட்ட கருத்திற்கு இடமில்லை என்று சொல்வது அந்த அரச பல்கலைக்கழகத்தினுடைய அதிகாரத்தில் இருப்பவர்களோடு சேர்ந்து போவதாக தானே கருத வேண்டும்.

ஆகவே முழுமையாக நாங்கள் பல்கலைக்கழக சூழல் என்பது அனைத்து கருத்துகளுக்குமான உண்மையான இடமாக இல்லாத பட்சத்தில், ஒரு கருத்துக்கு மட்டும் இடமளிக்கப்படாத போது அது கருத்துச் சுதந்திரத்தினுடைய மறுப்பு என்று பேசுவது ஒரு பரிமாணத்தை மட்டும் தான் காட்டுவதாக நான் கருதுகிறேன். ஆகவே அரச பல்கலைக்கழகங்களில் கருத்துச் சுதந்திரத்தை பேசுவோர் பல்கலைக்கழகங்கள் அரச கட்டுப்பாட்டில் இருந்து ஒரு குறிப்பிட்ட அரசியல் தத்துவார்த்தத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபடுவதையும் பேச முன்வர வேண்டும். அப்படியாக பேச முன்வருகின்ற பொழுது தான் அறிவுத் தேடலும் சிறப்புறும். மெய்ப்பொருள் காணுகின்ற அறிவும் எங்களுக்கு கிடைக்கப்பெறும்.

(03ஆம் பக்க தொடர்ச்சி)




மற்றவர் சேர். ஜோன் கொத்தலாவல.

அன்றைக்கு முழு இலங்கையினரின் பாதுகாவலானாக சேர். பொன் இராமநாதன் இருந்தார். இதைவிட வெசாக் விடுமுறைக்காக குரல் எழுப்பி போராடி வெசாக் விடுமுறையை கொண்டு வந்தவரும் இவர் தான். இவ்வாறாக வலுவான பங்களிப்பை முழு இலங்கைக்குமான தலைவராக நின்று சேர். பொன் இராமநாதன் ஆற்றி இருக்கிறார். இதோடு ஒப்பிடும் போது தமிழ் தரப்பிற்கு ஆற்றிய பங்களிப்பு குறைவு என்று தான் சொல்லலாம். இங்கே அவர் பண்பாட்டு துறையில் தான் சில பங்களிப்பை செய்தார். பரமேஸ்வரா கல்லூரியை கட்டினார், இராமநாதன் கல்லூரியை கட்டினார். இவர் வலுவான தலைவராக இருந்ததை நாங்கள் பார்க்கிறோம்.

மூன்றாவது நபர் சேர். பொன் அருணாச்சலம். இவருடைய பங்களிப்பு மிகவும் வித்தியாசமானது. ஏனென்றால் இலங்கையில் முதன் முதலில் சமூக மாற்ற அரசியலின் தந்தையாக விளங்கியவர் சேர். பொன். அருணாச்சலம் தான். A. E. குணசிங்க போன்ற தொழிற் சங்க தலைவர்கள் இவரால் கவரப்பட்டு தான் அரசியலுக்கு வந்தார்கள். அருணாச்சலம் நீண்ட காலமாக அரச நீதிபதியாக இருந்தவர். அதற்கு பிறகு கடைசியாக பதிவாளர் நாயகமாக இருந்தவர். 1913 ஆம் ஆண்டு பதிவாளர் நாயகம் பதவியில் இருந்து விலகி அவர் அரசியலுக்கு வருகிறார். வந்த உடனேயே அவர் முதல் செய்த வேலை அடிமட்ட மக்கள் மத்தியிலே வேலை செய்தது தான். அந்த வேலைக்கு அவர் தேர்ந்தெடுத்த மக்கள் சமூகங்கள் இரண்டு: ஒன்று மலையக மக்கள், மற்றது சேரிப்புறங்களில் வாழ்கின்ற அடிமட்ட தொழிலாளர்கள்.

இலங்கையில் முதன்முதலில் தொழிற் சங்கம், இலங்கை தொழிலாளர் நலன்புரி சபை (CeylonWorkers Welfare League) அமைத்ததும் அவர் தான் (1939). மேலும், பெரி சுந்தரத்துடன் இணைந்து மலையக மக்களுக்கு இலங்கை தொழிலாளர் சம்மேளனம் (Ceylon Workers Congress) என்ற தொழிற்சங்கத்தை அமைத்தார். அதன் தலைவராக பெரி சுந்தரம் இருந்தார். செயலாளராக அருணாச்சலம் இருந்தார். அந்த அமைப்புக்குள்ளால் தான் தோட்டங்களில் இருந்த துண்டு முறையை இல்லாமல் செய்தார். துண்டு முறை என்றால் ஒரு தோட்டத்தில் இருந்து இன்னுமொரு தோட்டத்திற்கு போவதாக இருந்தால், அந்த தோட்டம் துண்டு கொடுக்க வேண்டும். அந்த துண்டு கொடுத்தால் தான் அந்த தோட்டத்தை விட்டு போகலாம். ஒருவகையான அடிமை சீட்டு மாதிரி தான். அதற்கு எதிராக போராடி அதை இல்லாமல் செய்ததில் அருணாச்சலத்திற்கு பங்களிப்பு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

கொழும்பு சேரிப்புறங்களில் வேலை செய்வதற்காக சமூக நலன்புரி சங்கம் என்று ஒன்றை உருவாக்கினார். உருவாக்கி அந்த சேரிப்புற மக்கள் மத்தியில் போய் அவர்களுடைய நலன்களை முன்னேற்றுவதற்கான பணிகளை செய்ய தொடங்கினார். அதை சிறப்பாக செய்ய வேண்டும் என்பதற்காக இலண்டனிற்கு சென்று இலண்டன் மாநகரசபை எப்படி தொழிலாளர்கள் மத்தியில் பணியாற்றுகிறது என்பதை கற்றுக் கொண்டார். அதை கொண்டுவந்து இங்கே பிரயோகிக்கின்ற வேலைகளை செய்தார். இது மிகவும் முக்கியமானது. அதேவேளை அவர் தான் இலங்கைக்கென்று ஒரு தேசிய இயக்கத்தை உருவாக்குவதில் முன் நின்றார். உதாரணமாக, இலங்கை தேசிய சங்கத்தை (Ceylon National Association) அவரே உருவாக்

கினார். ஆகவே ஒரு தேசிய அரசியல் இயக்கத்தின் தந்தையாகவும் அருணாச்சலம் தான் இருந்தார்.

பின்னர், அன்றைக்கு பல்வேறு பிரிவுகளாக இருந்த அமைப்புக்கள் எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து 1919 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11 ஆம் திகதி இலங்கையினுடைய முதலாவது தேசிய இயக்கமான இலங்கை தேசிய சம்மேளனத்தை (Ceylon National Congress) உருவாக்கினார். அவரே அதில் முன் நின்று உழைத்ததால் அவரே அந்த தேசிய இயக்கத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். ஆகவே ஒரு சமூக மாற்ற அரசியலினுடைய தந்தையும் அவர் தான். அதேவேளையில் ஒரு தேசிய அரசியல் இயக்கத்தின் தந்தையும் அவராக தான் இருந்தார். இவரே தான் தமிழர்களின் இன அரசியலினுடைய தந்தையாகவும் இருந்தார்.

அதாவது சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் தரப்புகளுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறி செயற்பட்ட போது இவர்களோடு இணைந்து பயணிக்க முடியாது என்று கூறி அவர் இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து வெளியேறி 1921 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி இலங்கை தமிழர் மகாசபையை (Ceylon Tamils League) உருவாக்குகிறார். அந்த தமிழர் மகா சபையின் உருவாக்கத்தோடு தமிழ் மக்களினுடைய இன அரசியல் என்பது ஆரம்பிக்கப் படுகிறது. இரண்டாம் கட்டமும் உருவாகிறது.

---

(24ஆம் பக்க தொடர்ச்சி)

கல்வித்துறையை பார்த்தால், மாந்தை மேற்கில் ஒரே ஒரு விசேட கல்வி அலகு ஆண்டாங்குளம் பாடசாலையில் இருக்கிறது. அங்கு இரண்டு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இந்த விசேட கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்ட காலகட்டங்களில் பிள்ளைகளின் வருகை அதிகமாக இருந்தது. கொரோனாவிற்கு பிற்பட்ட காலத்தில் வருகை குறைந்திருக்கிறது. நாங்கள் அதற்கான காரணங்களை தேடி பார்த்த போது, குடும்ப சூழ்நிலை, பொருளாதார கஷ்டங்கள், வேலையின்மை என பல காரணங்கள் இருக்கின்றன.

ஐந்து பிள்ளைகள் இருக்கின்ற ஒரு வீட்டில், ஒரு பிள்ளை விசேடகல்வி தேவையுடைய பிள்ளை என்றால், மற்ற நான்கு பிள்ளைகளும் படித்து உயர்தரம் கற்று பல்கலைக் கழகம் போகும், விசேட தேவைக்குட்பட்ட பிள்ளை படித்தால் எதையும் காணப்போவதில்லை என்ற ஒரு மனநிலையில் பெற்றோர் இருக்கிறார்கள். அதனால் அந்த விசேட கல்வியின் தேவையை அவர்கள் உணர்கிறார்கள் இல்லை. அந்த சிறுவர்களுடன் பணி புரிகின்ற எனது அனுபவத்தினை வைத்து சொல்கிறேன், ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு விதமான ஆற்றல் இருக்கின்றது. சில பிள்ளைகள் நன்றாக சித்திரம் வரைய கூடியவர்களாக இருப்பார்கள், சில பிள்ளைகள் நன்றாக ஆடக் கூடியவர்களாக இருப்பார்கள், சில பிள்ளைகள் நன்றாக பாடக் கூடியவர்களாக இருப்பார்கள்.

ஒரு வீட்டில் பொருளாதார சூழ்நிலை கஸ்டம் என்பவற்றால் விசேட தேவையுடைய பிள்ளையை பற்றி சிந்திக்க கூடிய மனநிலையில் அந்த பிள்ளையின் அம்மா இருக்க மாட்டார். உண்மையிலேயே சிந்திக்க கூடிய தாயாக இருந்தாலும் கூட சுற்றி இருக்கின்ற சமூகம் ஒவ்வொரு கதை சொல்லும். ‘இந்த பிள்ளை படித்து எதனை சாதிக்க போகிறது? இந்த பிள்ளையை ஏன் பாடசாலைக்கு ஏற்றி இறக்குகிறாய்?’ என்று கேட்கும். ஆகவே ஒரு தாய் முன்வரக் கூடிய தன்மையில் இருந்தாலும் சூழ இருக்கின்ற சமூகம் அதனை ஏற்றுக் கொள்ளாது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையை பார்த்தோமாக இருந்தால், விசேட தேவையுடைய பிள்ளைகளை ஒழித்து வைக்கின்ற சூழ்நிலை இருந்தது. யாருக்கும் வெளியில் சொல்ல மாட்டார்கள். ‘பாவம் செய்பவர்களுக்கு தான் இவ்வாறான பிள்ளை பிறக்கும். இவர்கள் ஏதோ அநியாயம் செய்திருக்கிறார்கள்’ என்று ஒரு கருத்து சமூகத்தினரிடையே இருந்தது. ஆனால் தற்போதைய சூழலில் விசேட தேவையுடைய பிள்ளைகள் வெளியில் வர ஆரம்பித்துள்ளனர். அவர்களுடைய திறமைகள் வெளியில் வர வர மேலும் பல விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளும் வெளிப்படுகி

**பெற்றோருக்கு மனஉளைச்சல் கொடுக்காத அரச ஊழியர்களாக அவர்கள் இருக்க வேண்டும். ஆனால், 'இவர்களோடு எனக்கு கரைச்சல். இயலாது, இயலாது என்று வந்து நிற்கிறார்கள்.' என்று எரிந்து விழுகின்ற அரச அலுவலர்களை நிறைய பார்த்திருக்கிறேன்.**


றார்கள். பெற்றோரும் இந்த பிள்ளைகளை கட்டாயம் பாடசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள்.

ஆனாலும் அப்படி முன்வருகின்ற பெற்றோருக்கு நிறைய மனஉளைச்சலும் அழுத்தங்களும் இருக்கின்றன. அவர்களுடன் ஆழமாக கதைத்து பார்க்கும் போது தெரியும். எனது களப்பணியில் இப்படியான நிறைய அம்மாக்களை பார்த்திருக்கிறேன். அவர்களின் வெற்றிக்கு பின்னால் பார்த்தால் அவ்வளவு வலியும் வேதனையும் நிரம்பி இருக்கும். சமூக சேவை திணைக்களத்திற்கோ, கிராம சேவையாளர்களோ, பிரதேச செயலகத்திலோ இப்படியொரு பிள்ளை இருக்கிறது, இந்த தேவை இருக்கிறது என்று சொன்னால் அரசாங்கத்தினால் வருகின்ற திட்டங்களை அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படி சொல்லாவிட்டாலும் பெற்றோருக்கு மனஉளைச்சல் கொடுக்காத அரச ஊழியர்களாக அவர்கள் இருக்க வேண்டும். எல்லோரும் அப்படி இல்லை. ஆனால், 'இவர்களோடு எனக்கு கரைச்சல். இயலாது, இயலாது என்று வந்து நிற்கிறார்கள்.' என்று எரிந்து விழுகின்ற அரச அலுவலர்களை நிறைய பார்த்திருக்கிறேன்.

அரசாங்கத்தினால் உதவி வழங்கப்படும் திட்டம் இருக்கின்றது. மாற்றுத்திறனாளிகளுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவு இருக்கிறது. சக்கர நாற்காலி கொடுக்கும் திட்டம் இருக்கிறது. இப்படியான திட்டங்களை அரச அலுவலர்கள் கட்டாயம் சொல்ல வேண்டும். கிடைப்பது கிடைக்காமல் போவது இரண்டாவது விடயம். ஆனால் கட்டாயம் இவற்றை விசேட தேவைக்குட்பட்ட பிள்ளையை வைத்திருப்பவர்களுக்கு சொல்ல வேண்டும். கல்வி தேவை என்ன இருக்கிறது, சுகாதார தேவை என்ன இருக்கிறது, அந்த பிள்ளையை வெளி உலகத்திற்கு கொண்டு வர என்ன செய்யலாம், அந்த பிள்ளையின் பெற்றோருக்கு உளவியல் ரீதியாக எங்கு ஆற்றுகைப்படுத்தக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்று கட்டாயம் ஒரு கிராம சேவையாளர், சமூக சேவை திணைக்களத்தினர், பிரதேச செயலகத்தினர் முக்கியத்துவம் கொடுத்து இவர்களை இனங்கண்டு உதவ கூடியவர்களாக இருக்க வேண்டும். ஒரு இயலாத பிள்ளையின் அம்மாவிடம் சென்று உங்களுடைய கிராம சேவையாளர் எப்படி என்று கேட்டால் அந்த கிராம சேவையாளரின் குணவியல்பு அந்த அம்மாவின் கதையில் வெளிப்படும். உதவி கிடைத்தது கிடைக்காமல் போனது இரண்டாவது விடயம். அவர்கள் தனது பிள்ளையை ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற மனதிருப்தி அந்த அம்மாவிடம் இருக்கும்.

சுகாதாரம் தொடர்பாகவும் நான் கட்டாயம் சொல்ல வேண்டும். ஆரம்ப சுகாதார திணைக்களத்தினால் ஐந்து வயதிற்குட்பட்ட எல்லா பிள்ளைகளையும் நிறுவை எடுப்பார்கள். ஐந்து வயதிற்கு மேலே வந்துவிட்டார்கள் என்றால் அவர்களை கவனிக்க மாட்டார்கள். அது அவர்களுடைய திணைக்களத்தின் சட்டங்கள். ஆனால் விசேட தேவைக்குட்பட்ட ஒரு பிள்ளையாயின் 18 வயது வரையில் அந்த பிள்ளையை நிறுவை செய்வதோ, உரிய போசாக்கு கிடைக்கிறதா என்பதனை அவதானிப்பதோ நடைமுறையில் இருந்தால் அம்மாவிற்கு ஒரு உத்வேகமாக இருக்கும். எல்லா அம்மாக்களுக்கும் எல்லா பிள்ளைகளும் பொக்கிஷம் தான். ஆனால் குடும்ப சூழ்நிலைகளினால் போசாக்கு தேவையுடைய பிள்ளைகளை கவனிக்க முடியாமல் இருக்கும். இவர்களுக்கு விசேட கவனிப்புகள் தேவைப்படுகின்றன. சாதாரண பிள்

ளைகளை போல இவர்கள் இருக்க மாட்டார்கள். இவர்களுடைய உடல்நிலைக்கு ஏற்றது போல போசாக்கான உணவுகள் கொடுக்க வேண்டும். சில பிள்ளைகள் எழும்பி நடக்க இயலாதவர்களாக இருப்பார்கள். ஆனால், சில பிள்ளைகள் அதி வேகமாக இருப்பார்கள். அவர்களுக்கு நிறைய ஊட்டச்சத்துக்கள் விரயமாக்கப்பட்டு கொண்டிருக்கும். நிறைய உணவு கொடுக்க வேண்டி இருக்கும். கீரை வகைகள், பழ வகைகள் கொடுக்க வேண்டும். ஆனால் அம்மாக்களுக்கு பொருளாதார சூழ்நிலைகள் இடமளிக்காமல் இருக்கும். நாங்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஆட்களாக இருந்தால், எங்களுடைய தோட்டத்திலேயே நல்ல காய்கறிகள், கீரை வகைகள் விளைவிக்க கூடிய தன்மை இருந்தாலும் இப்படியொரு பிள்ளையை வைத்திருக்கின்ற அம்மாவிற்கு எதனையும் செய்து கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கும். தானே விளைவித்து அதனை பிள்ளைக்கு கொடுக்க முடியாதிருக்கும்.



எந்தவொரு அம்மாவும் எனக்கு இப்படியான விசேட தேவையுடைய பிள்ளை தேவை என்று நினைத்து பெற்றுக் கொள்வதில்லை. ஆனால் அப்படியொரு பிள்ளை வந்து விட்டது என்று சோர்ந்து போவதை விட, சமூகம் ஒதுக்குகிறது என்பதை விட எனது பிள்ளைக்கு கல்விக்கு என்ன தேவை, சுகாதாரத்திற்கு என்ன தேவை என்று ஒவ்வொரு அம்மாக்களும் தேடி தேடி போக வேண்டும். நாங்கள் தேட ஆரம்பித்தால் எங்களை பற்றி சிந்திக்கின்றவர்கள் எங்கோ இருப்பார்கள். தேடும் போது கட்டாயம் கிடைக்கும்.

விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளுக்குள் இன்னுமொரு ஆற்றல் இருக்கும். அவர்களாலும் வாழ்க்கையில் சாதிக்க இயலும். இல்லாத வீதத்தை நினைத்து கவலைப்படாமல் இருக்கின்ற வீதங்களை வைத்து கொண்டு அதனை பயன்படுத்தி என்ன சாதிக்கலாம் என்று இந்த பிள்ளைகளுக்காக கஷ்டப்பட வேண்டும். பெற்றோர்களிடத்தில் பல வலிகள் இருக்கும். ஆனால் அவற்றை எல்லாம் கடந்து அதற்கும் மேலான தருணங்கள் நிறைய இருக்கின்றன. அண்மையில் இந்தியாவில் விசேட தேவைக்குட்பட்ட பிள்ளை ஒருவர் பாக்குநீரிணையை கடந்து கின்னஸ் சாதனை படைத்திருக்கிறார். கிட்டத்தட்ட 22 வயதாக இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த 22 வருடங்களும் அந்த சிறுவனின் அம்மா அவரோடு கஷ்டப்பட்டிருக்கிறார். அந்த சிறுவருக்கு கை, கால் எதுவும் இயங்காது; தனியாக உடல் மட்டும் தான் அசையும்; கதைக்க தெரியாது; சாப்பாடு கூட ஊட்டி விடப்படுகிறது. அந்த உடல் அசைவை மாத்திரம் வைத்துக் கொண்டு அந்த அம்மா கஷ்டப்பட்டதால் தான் அந்த பிள்ளை சாதனை படைத்திருக்கிறார். அந்த 22 வருட வலியும் கஷ்டமும் யாராலும் புரிந்து கொள்ள முடியாதவை. ஆனால் அந்த சாதனைக்கு பின்னால் அம்மாவிற்கு அது ஒரு சிறிய விடயமாகிவிடும்.

ஒவ்வொரு பெற்றோரும் கஷ்டப்பட்டால் எங்களுடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் நல்ல ஒரு எதிர்காலம் இருக்கிறது. பெரும்பான்மையாக பெற்றோருடன் நாங்கள் முதலில் கதைக்கும் போது மன ரீதியாக மிகவும் அழுத்தத்திற்கு உள்ளாகி இருப்பார்கள். முதலில் அவர்களுடைய மனதில் என்ன இருக்கிறது என்று அவர்களை கதைக்க விட வேண்டும். அதற்கு முதலில் எங்களை அவர்கள் நம்ப வேண்டும். நான் அவர்களுடன் கதைத்துவிட்டு அந்த கதைகளை வேறு ஒரு நபரிடம் சொல்பவராக இருக்க கூடாது. நான் அந்த அம்மாவிற்கு ஆறுதல் சொல்கின்ற நபராக இருக்க வேண்டும். அம்மாவிற்கு ஒரு நம்பிக்கை வர வேண்டும். நம்பிக்கை கொடுக்கின்ற வகையில் எங்களுடைய வார்த்தைகள் இருக்க வேண்டும். அதற்கு பிறகு அம்மா தனது பிள்ளையை ஒரு விசேட தேவைக்குட்பட்ட பிள்ளை என்று ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும். அப்போது தான் அடுத்த கட்டத்திற்கு நகர்வார்கள். அடுத்தது



இந்த பிள்ளைக்கு என்ன தேவை என்று தேடுகின்ற மனநிலையை உருவாக்க வேண்டும்.

மாந்தை மேற்கில் ஒரு வீட்டில் இரண்டு பிள்ளைகள், மூன்று பிள்ளைகள், என இவ்வாறான பிள்ளைகள் இருக்கின்றார்கள். படுக்கையில் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு மா சாப்பாடு, தண்ணீர் சாப்பாடு என்றவாறு அம்மாவிற்கு முழுநேரமும் அந்த பிள்ளையை கவனிப்பது தான் வேலையாக இருக்கும். அப்பா நாளாந்த கூலி வேலை செய்பவராக இருப்பார். ஏனைய பிள்ளைகள் படித்துக் கொண்டிருப்பார்கள். இப்படியான பொருளாதார சிக்கல்கள் நிறைய இருக்கின்றன. எங்களால் அவர்களுக்கு எல்லாவற்றையும் கொடுக்க முடியும் என்று இல்லை. அம்மாவிற்கு ஒரு ஆறுதல் கொடுக்கலாம். அம்மா அந்த பிள்ளையை கவனித்து கொண்டே வேறு என்ன செய்யலாம் என்ற சிறிய ஆலோசனைகளை வழங்கலாம். அம்மா கஷ்டப்படாமல் பிள்ளைகளையும் கவனித்து கொண்டு நகர்த்த கூடிய சிறு சிறு வேலைகளை சொல்லி கொடுக்கலாம்.

ஒரு வீட்டில் மூன்று விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகள் இருப்பதனை நான் பார்த்திருக்கிறேன். அந்த அம்மாவிற்கு அவர்களை விட்டு வேறு எங்கும் நகர முடியாது. இரவில் படுத்தால் கூட இந்த சிந்தனைகள் தான் ஓடிக்கொண்டே இருக்கும். அந்த சிந்தனையில் இருந்து அம்மா எப்படி விடுபடலாம் என்பது தொடர்பாகவும் சொல்லி கொடுப்போம். இப்படியான விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளுடன் கஷ்டப்பட்டு நன்றாக சாதித்தவர்களை பற்றி சொல்வது அந்த அம்மாவிற்கு ஒரு தன்னம்பிக்கையை உருவாக்கும். சிறிய சிறியதாக ஆரம்பித்து பின்னர் அவர்களுடைய முன்னேற்றங்களை பார்த்து அவர்களை உயர்த்தி விடுகிறோம்.

மாற்றுத்திறனாளிகளில் ஒவ்வொரு வகை இருக்கிறது. ஓர்ட்டிசம், கண் பார்வையின்மை, பேச்சு குறைபாடு இப்படியாக ஒவ்வொருவரின் தேவைகளும் ஒவ்வொரு விதமாக இருக்கும். அவர்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் தான் அவர்களை அணுகி கொள்வோம். கை, கால் பொருத்த வேண்டுமென்றால் எங்களுடைய மன்னார் மாவட்டத்தில் அப்படியான நிறுவனங்கள் எங்கு இருக்கின்றன என்பதை அறிந்து வைத்து கொள்வோம். சந்தர்ப்பங்கள் வரும் போது அம்மாவிற்கு விடயத்தை தெரியப்படுத்துவது, அல்லது நாங்களே உரிய நிறுவனங்களை கூட்டி சென்று அந்த பிள்ளைகளை காட்டுவது, அவர்களுக்கு அந்த உதவிகளை எடுத்து கொடுக்கின்ற வேலைகளை செய்து கொண்டு வருகிறோம்.

கடந்த மாதம் மாந்தை மேற்கில் உள்ள விசேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோர்களை ஒன்றிணைத்து ஒரு கழகமாக உருவாக்கி இருக்கிறோம். இதனுடைய நோக்

கம் முதலில் பெற்றோர்களை தங்களுக்குள் மனம்விட்டு கதைக்க வைப்பதே. ஒரு விசேட தேவைக்குட்பட்ட பிள்ளையின் அம்மா சாதாரண பெற்றோருடன் கதைப்பதற்கும் தன்னைப் போன்ற இன்னுமொரு விசேட தேவைக்குட்பட்ட பிள்ளையின் அம்மாவுடன் கதைப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. முதலில் நம்பிக்கை அதிகமாக இருக்கும். தங்களது பிள்ளைகளின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்கள். இதன்மூலம் தேவையான கருத்துக்கள் பரிமாறப்படும். மற்றும் எல்லோருடைய தேவைகளையும் எல்லோரும் உணர வேண்டும். இப்படி குழுவாக இருக்கும் போது ஏனைய பிள்ளைகளின் நிலைமையும் மற்றவர்களுக்கும் தெரியும். விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளுக்கான நிறுவனங்கள் மற்றும் உதவி திட்டங்கள் பற்றி அறிந்து கொள்வார்கள்.

உதாரணமாக ஒரு விசேட தேவைக்குட்பட்ட பிள்ளையின் அம்மா அந்த பிள்ளையை வவுனியாவிற்கு சிகிச்சைக்காக கொண்டு சென்று வருவாராயின் அவர் அங்கு என்ன என்ன வகையிலான பிள்ளைகளுக்கு சிகிச்சை நடக்கிறது என்பதை அறிந்து இருப்பார். இந்த கழக கூட்டத்திற்கு வரும் போது அதனை சொல்வார். இப்படி கழகமாக இயங்கும் போது உதவி செய்ய வருகின்ற நிறுவனங்களுக்கு இலகுவாக எங்களது பிள்ளைகளின் தேவையை தெரியப்படுத்தலாம். மற்றும் மாந்தை மேற்கில் இந்த இந்த தேவையுடைய பிள்ளைகள் இவ்வளவு இவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதை தொகுத்து வைத்து கொள்ள முடியும். உதவி திட்டங்களை வழங்கும் நிறுவனங்களை அணுகுவதற்கும் நாங்கள் ஒரு கழகமாக செயற்பட்டால் தான் சிறப்பாக இருக்கும்.

நாங்கள் இதனை ஒரு அமைப்பாக நினைக்கவில்லை. அமைப்பு எனும் போது ஒரு திணைக்களத்திற்கு கீழ் பதிவு செய்வது, கூட்டறிக்கை வாசிப்பது போன்றவை தேவைப்படும். அது எதுவுமே எங்களுக்கு வேண்டாம். ஆகவே அமைப்பின் சிந்தனைகள் இல்லை. நாங்கள் ஒரு துன்பத்தில் இருக்கிறோம், நாங்கள் அதிலிருந்து வெளியில் வர வேண்டும். எங்களுடைய பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்லதொரு நிலைமைக்கு வர வேண்டும். நாங்கள் ஒரு கழகமாக இருக்கிறோம், எங்களுடைய பிரச்சனைகளை நாங்கள் கதைக்கிறோம், எங்களுக்கு தீர்வு வர கூடிய இடங்களை நாங்கள் தேடுகிறோம், எங்களுக்கு கிடைக்க கூடியவற்றை எடுத்து கொள்ளுகிறோம், அவற்றை பகிர்ந்து கொள்கிறோம். கழகம் தொடங்கி சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. ஒரு குழுவாக இருப்பதனால் கதைத்து கொள்வது, இது தொடர்பான விடயங்களை பகிர்ந்து கொள்வது மிகவும் சந்தோசமாக இருக்கின்றது.

---

**வாசகர்களே!**

நிமிர்வு இதழை **www.nimirvu.org** இணையமூடாகவும் சமூக ஊடக பக்கங்களான **facebook.com/nimirvu** என்ற முகநூல் ஊடாகவும் **youtube.com** இல் **nimirvu** என்று தேடுவதனூடாகவும் நிமிர்வு இதழின் அரசியல், சமூகம், பொருளாதாரம் குறித்த காணொளிகளையும் பார்க்க முடியும்.

இதுவரை வந்த நிமிர்வு இதழ்களை நூலகம் **(noolaham.org)** இணையத்தின் ஊடாக அதன் இதழ்கள் பகுதியில் மின்னூல் **(pdf)** வடிவில் வாசிக்க முடியும்.



சுதர்சன் இளவேணி

# விசேட தேவையுடைய சிறார்களின் பெற்றோர் கழகம்



மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பில் விசேட தேவைகளுடன் 64 சிறுவர்கள் இருக்கிறார்கள். அதில் விசேட கல்வி தேவையுடையவர்களில் கல்விக்கூடங்களில் படிப்பவர்கள் இருக்கிறார்கள், வீட்டில் இருந்து படிப்பவர்களும் இருக்கிறார்கள். மாந்தை மேற்கில் உள்ள மாற்றுத்திறனாளி சிறுவர்களை பொறுத்தவரையில் நிறைய தேவையுடையவர்கள் பெரும்பான்மையாக இனங்காணப்பட்டிருக்கின்றார்கள். நாங்கள் மாதம் மாதம் இல்லத்தரிசிப்பு செய்வதுண்டு. பெரும்பான்மையான சிறுவர்களின் அன்றாட தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன.

அரசாங்கத்தினால் சில உதவி திட்டங்கள் இருக்கின்றன. ஆனாலும் அவை முழுமையாக தேவைகளை பூர்த்தி செய்வது இல்லை. அவர்களுடைய சட்டத்திற்கு உட்பட்டு தான் அவர்கள் உதவிகளை செய்ய முடியம். சமூக சேவை திணைக்களத்தின் ஊடாக ஒரு சக்கர நாற்காலி வேண்டும் அல்லது மேலைத்தேய கழிப்பறை வேண்டும் என்று கேட்டால் அவர்களால் வழங்கப்படும் தொகை 60000/= அல்லது 100000/= என்றவாறு ஒவ்வொரு வருடத்திற்கும் வேறுபட்டு இருக்கும். ஆனால் அந்த தொகைக்குள் அந்த கழிப்பறையை பூர்த்தி செய்ய முடியாது. அதனால் அந்த பிள்ளையின் தேவை பூர்த்தி செய்யப்படாமலே போகிறது. இவ்வாறாக பெரும்பான்மையான திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட முடியாமல் தான் இருக்கின்றன.

(19ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 27.11.2023 அன்று வெளியிடப்பட்டது.